11.11.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண். 170 /2019 ) திரு.எஸ்.முருகேசன்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>

1) இதற்கு முந்தைய குறுக்கு விசாரணையில் எனது தந்தைக்குரிய வாரிசு சான்று தாக்கல் செய்ய முடியுமா என்று கேட்ட போது உங்கள் தரப்பில் எனது தந்தையின் வாரிசு சான்றினை குறிப்பாணை மூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் அது குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் வாரிசு சான்றினை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாரிசு சான்றிதழில் நான் மனுக்கொடுத்து வட்டாட்சியரால் 28.08.2012 ம்தேதியில் வழங்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வாரிசு சான்றுக்கு மனுக்கொடுப்பதற்கு தகவல் கொடுத்தது நான் தான் என்றால் சரிதான். வாரிசு சான்று தவறு என்று தான் வாதி கோட்டாட்சியரிடம் மனு செய்தார் என்றால் சரிதான். கோட்டாட்சியர் திரு.ஜெயக்குமார் என்பவரை தவறுதலாக சேர்த்துள்ளதால் ஏற்கனவே எனக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழை ரத்து செய்ய உத்தரவு பிறப்பித்தார் என்றால் தவறு. கோட்டாட்சியர் வாரிசு சான்று ரத்து உத்தரவில் லலித்மோகனை சேர்க்காததால் ரத்து செய்ததாக உத்தரவில் காணப்படவில்லை என்றும், ஜெயக்குமார் என்பவர் சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு நேரிடையான வாரிசு கிடையாது என்பதால் மேற்படியாரின் பெயர் வாரிசு சான்றிதழில் சேர்க்கப்பட்டது தவறு என்று உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் செல்வதுரைச்சியம்மாளின் மகன் தான் ஜெயகுமாரரை அம்மாவின் பங்குக்காக சேர்க்கப்பட்டுள்ளது. எனது எதிர்வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் லலித்மோகனை சேர்க்காததால் தான் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மனு கொடுக்கும் போதே லலித்மோகனை ஏன் சேர்க்கவில்லை என்றால் சரிதான். லலித்மோகன் சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு வாரிசு கிடையாது என்பதால் தான் நான் மனுக்கொடுக்கும் போதே அவரை வாரிசாக காண்பித்து மனுக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுக்கொடுக்கும் போது லலித்மோகன் பெயரை சேர்க்காமல் இருந்துவிட்டு தற்போது வழக்கினை காலதாமப்படுத்த வேண்டிலலித்மோகனை பற்றி கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

2) 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வாரிசு சான்றை வைத்து பட்டா எண்.3435, 3436 ஆகிய பட்டாக்களில் என்னுடைய பெயரும்,ஜெயக்குமாரின் பெயரும் கூட்டாக

சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாக்களில் ஜெயக்குமார் பெயரை சேர்த்தது தவறு என்று என் மீதும் ஜெயக்குமார் மீதும் கோட்டாட்சியரிடம்இந்த வழக்கின் வாதி மனுக்கொடுத்துள்ளார் என்றும் அதில் நான் ஒரு தரப்பினராக இருந்து வருகிறேன் என்றால் தெரியாது. தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்து அனுப்பப்பட்ட உத்தரவினை எனக்கும் நகல் அனுப்பப்பட்டுள்ளது என்றால் 3 வது நபராக என்னை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா மாறுதல் உத்தரவு நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஜெயக்குமார் கோட்டாட்சியரின் உத்தரவு தவறு என்று தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலருக்கு கொடுத்த மனுவின் பேரில் பிறப்பித்த உத்தரவு எனக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.7,8 உத்தரவில் ஜெயக்குமார் என்பவர் சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு நேரிடையான வாரிசு இல்லை என்பதால் மேற்படி பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஜெயக்குமார் ஒரு வாரிசு என்று கட்சிசெய்கிறார் என்றால் அவரின் அம்மாவுக்காக கட்சி செய்கிறேன்.ஜெயக்குமார் என்பவர் இந்த வழக்கில் 3 ம் நபராக மனு தாக்கல் செய்து கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் அவரது அம்மாவுக்கு ஏற்படும் பங்கு சொத்திற்காக அவர் கட்சிசேர்க்கப்பட்டுள்ளார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் நான் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.9 எழுதிய தேதியன்றே மற்றொரு ஏற்பாட்டு ஆவணம் எனது மனைவிக்கு எழுதிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண்.3435,3436 ஆகியபட்டாக்களை காண்பித்து தான் ஏற்பாட்டு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.9,10 ஆவணங்கள் எழுதிக்கொடுக்கும் போது கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு விசாரணையில் நிலுவையில் இருந்தது என்றால் மனுக்கொடுத்ததே எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9,10 ஆவணங்களில் எனக்கு கிடைக்கக்கூடிய 1/3 பங்கைப்பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோன்றுஜெயக்குமார் அவரது பங்கை 1/3 பொறுத்து அவரது மனைவிக்கு

நன்கொடை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால்ச ரிதான்.தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் ஜெயக்குமார் நான் எழுதிக்கொடுத்த தேதியிலியே எழுதிக்கொடுத்த ஆவணங்களின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் **வா.சா.ஆ.**11,12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஜெயக்குமார் நேரிடையான வாரிசு கிடையாது என கோட்டாட்சியர் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவுக்கு விரோதமாக நானும், ஜெயக்குமார் என்பவரும் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஜெயக்குமாரும், லலித்மோகனும் சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு எந்தக்காலத்திலும் நேரிடையான வாரிசாக வரமாட்டார்கள் என்றாலும் எனது துாண்டுதலின்பேரில் தான் ஜெயக்குமாரும், லலித்மோகனும் கட்சிசெய்கிறார்கள் என்றால் சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டப்படி நானும் இந்த வாதி மட்டும் தான் இறந்து போன சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு நேரிடை வாரிசு என்றால் சரியல்ல. நானும், வாதியும் தவிர நேரிடை வாரிசுதாரர்கள் கிடையாது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
11.11.2025.